## ஷைத்தானுடைய ஊசலாட்டங்களை அகற்றுவதற்கான துஆ

1 ஷைத்தானின் தீமையிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்பு கேட்பது

2 அதான் (பாங்கு) சொல்வது

3 சுன்னத்தான திக்ருகள் மற்றும் திருக்ஃகுர்ஆன் திலாவத்து செய்தல்

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், நீங்கள் உங்கள் வீடுகளைக் ஃகப்ரஸ்தான்களாக ஆக்கிவிடாதீர்கள், எந்த வீடுகளில் சூரா பஃகரா ஓதப்படுகின்றதோ அந்த வீடுகளிலிருந்து ஷைத்தான் ஓடிவிடுகின்றான் (முஸ்லிம்)

இவ்வாறே, ஷைத்தானை விரட்டும் அமல்களில் முக்கியமானவை, காலை மாலைகளில் ஓதும் துஆக்கள், வீட்டிற்குள் நுழையும்போது மற்றும் வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியில் செல்லும்போது ஓதும் துஆக்கள், பள்ளிவாசலில் நுழையும்போது மற்றும் பள்ளிவாசலிலிருந்து வெளியில் செல்லும்போது ஓதும் துஆக்கள் மற்றும் மார்க்கச்சட்டங்களின் பகுதியாக பல ஆதாரப்பூர்வமான துஆக்களும் உள்ளன, உதாரணமாக, படுக்கைக்குச் செல்லும்போது ஆயத்துல் குர்சி மற்றும் சூரா பஃகராவின் கடைசி இரண்டு வசனங்கள் ஓதுவது ஆகியன.

எவர் ஒருவர் நூறு முறை இந்த துஅவை ஓதுவாரோ அவர் நாள் முழுவதும் ஷைத்தானிடமிருந்து பாதுகாப்பாக இருப்பார்:

لَا إِلٰهَ إِلاَّ اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، لَهُ المُلْكُ وَلَهُ الحَمْدُ، وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

*பொருள்: அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை, ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது, புகழ் அனைத்தும் அவனுக்கே, அவன் எல்லாவற்றின்மீதும் வல்லமையும் ஆற்றல்மிக்கவனாகவும் இருக்கின்றான்.*

இவ்வாறே, பாங்கு சொல்வதும் ஷைத்தானை விரட்டக்கூடியதாகும்.

* * *

www.uzairfalahi.com